# கிறிஸ்தவ விசுவாசிகளின் ஐக்கியம்

(ஸ்தாபிதம் 1973)

கோவில்பட்டி

8-வது வருடமாக நடத்தப்படும்

ஆவிக்குரிய

## எழுப்புதல் கூட்டங்களில்

பாடிய

# ஆனந்த கீதங்கள்

(SONGS OF JOY)

யெகோவா ஷாலோம்

1981 ஜனவரி 13 முதல் 16 முடிய

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# அட்டவணை


| | பாட்டு எண் |
|---|---|
| அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா | 1 |
| அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே | 2 |
| அன்பெனும் அருட்பெரும் செல்வம் | 13 |
| அனுப்பும் தேவா உம் ஆவியினை | 14 |
| அஞ்ஞானத்தையும் வெல்பவர் கிறிஸ்து | 23 |
| ஆத்துமமே என் உள்ளமே | 5 |
| ஆவியிலே புதுமை அடைவோம் | 6 |
| ஆர்ப்பரிப்போம் தினம் அகமகிழ்வோம் | 8 |
| இயேசுவின் நாமத்தில் கூடிவந்தோம் | 7 |
| இயேசுவின் திருச்சபையே | 12 |
| இறைவழி செல்வோர் பேறுபெற்றோர் | 19 |
| இயேசுவனைக் கண்டதும் | 20 |
| இஸ்ரவேலே இஸ்ரவேலே | 22 |
| உம்மைப்போலாக்கும் இயேசுவே | 40 |
| உயர உயரப்போவதும் | 34 |
| என் இயேசுவின் சந்நிதியில் | 11 |
| என் தேவன் என் பெலனே | 16 |
| என்னை மீட்ட மீட்பரே | 26 |
| எந்தன் இயேசு எனக்கு நல்லவர் | 30 |
| எத்தனை தாலந்துகள் உன்னில் உள்ளதோ | 33 |
| எந்தன் பொன்னேசு பொற்பாதம் பாடிடுவேன் | 43 |
| ஒரே வழி எந்தன் இயேசுவின் வழி | 15 |
| ஒரு குப்பித் தைலத்தின் நறுமணத்தை | 35 |
| கிருபை கிருபை கிருபை பொழிவீர் | 24 |
| கரம் பிடித்தென்னை வழி நடத்தும் | 27 |
| துதிப்பேன் நேசர் இயேசுவையே | 3 |
| துதித்திடும் என்றும் இயேசுவின் நாமத்தை | 10 |
| துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்கழித்தாலும் | 18 |
| தேவனையே துதித்திடுவோம் | 4 |
| தேவன் வருகின்றார் வேகம் இறங்கி | 32 |
| தேவ தேவனைத் துதித்திடுவோம் | 9 |
| தேசமே பயப்படாதே | 21 |
| நான் பயப்படும் நாளில் | 39 |
| பாடுவேன் அல்லேலூயா | 29 |
| மகிழ்ந்திடுவேன் நான் கர்த்தருக்குள் | 28 |
| மகிழ்வோம் நம் ஆண்டவரில் என்றும் | 44 |
| மண்ணோரை மீட்கவந்த இராஜாவே | 36 |
| மோட்சமிறங்கி மகிமையால் நிரப்பினார் | 38 |
| முன்னேறிச் செல்வீர் - பின்நோக்காமலே | 17 |
| வாக்குத்தத்தங்கள் யாவும் எனதே | 37 |
| மீட்பர் இயேசுவே - கோரச் | 25 |
| நீங்களே என் சாட்சிகள் | 31 |
| This is the day | 41 |
| The Joy of the lord is my strength | 42 |
| Let the beauty of Jesus be seen in me | 45 |

# 1

*பல்லவி*

அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா (3)

*அனுபல்லவி*

ஆனந்தக் கூட்டமாய் ஒன்றாகக் கூடி
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்.

*சரணம்*

1. விசுவாசக் கூட்டத்தார் ஒன்றாகச் சேர்வோம்
தாக்கங்கள் யாவையும் தள்ளிடுவோமே
இயேசுவின் அன்பையே உயர்த்திடுவோமே
என்றென்றும் அன்பிலே ஒன்றாய் நின்றே — ஆனந்த

2. உறுப்புகள் பலவாகும் என்றிருந்தாலும்
உடல் ஒன்று ஒன்றேதான் ஆகுமன்றோ
போர் செய்ய ஒன்றாய் சேர்ந்திடுவோமே
எதிரி சாத்தானை வீழ்த்திடவே — ஆனந்த

3. ஜெய வீரர் இயேசு நம் முன் செல்கிறாரே
ஜெப சிந்தை கொண்டோராய் பின் செல்லுவோமே
வேதமாம் பட்டயம் ஏந்திடுவோமே
வேரோடு சாத்தானை வீழ்த்திடுவோம் — ஆனந்த

4. உப்பாய் ஒளியாய் உலகுக்கு ஆவோம்
உறக்கம் விடுத்து நாம் எழுந்திடுவோமே
இயேசுவின் பாதம் எண்ணற்றோர் சேர
இணைக்கும் பணியில் முன்னே நிற்போம் — ஆனந்த.

# 2

பல்லவி

அன்பினில் பிறந்த இறை குலம் வாழ்வே
அன்பினைக் காத்து அறம் வளர்ப்போமே
அறம் வளர்ப்போமே

சரணம்

1. ஒரு மனத்தோராய் அனைவரும் வாழ்வோம்
அருளொளி விளக்காய் ஒரு வழி போவோம்
பிரிவினை மறந்து திருமறை காப்போம் - 2
ஒருமையில் இறைவன் திருமுகம் காண்போம் — அன்பினில்

2. பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி
பெருமை செய்தாரே புனித பேரன்பை
பிறந்த நம் வாழ்வின் பயன் பெறவேண்டும் - 2
பிறரையும் நம்மைப்போல் நினைத்திட வேண்டும் — அன்பினில்

3. மலர்ந்திடும்போது மணம் தரும் பூப்போல்
மலர்ந்திடும் வாழ்வு பணிவிடை செய்தால்
நலம் பெறக் காக்கும் கடவுளைப் போற்றி - 2
நிலந்தனில் இணைந்த குடும்பமாய் வாழ்வோம் — அன்பினில்

# 3

துதிப்பேன் நேசர் இயேசுவையே
துதிகள் செலுத்தியே
கர்த்தரின் செயல்கள் என்றென்றுமே
எண்ணிலடங்காதோர் ஆச்சர்யமே.

சரணம்

1. பாரில் எம் பாவம் யாவும் தீர்த்தார்
பாத்தில் ஆவல் தீர்ப்பார்
அகமதில் சந்தோஷம் ஈந்தார்
அவர் நாமம் என்றும் போற்றிடுவேன் — துதிப்பேன்

2. பாவ சாபங்கள் ரோகங்களை
நேசர் இயேசு சுமந்தார்
அகத்தில் எந்தன் துணையானார்
அவர் துதி என்றும் சாற்றிடுவேன் — துதிப்பேன்

3. சத்துரு சேனை தாக்கும் நேரம்
பத்திரமாகக் காத்தார்
யுத்தம் எனக்காய் நடத்தினார்
நித்தமும் துதித்தே பாடிடுவேன் — துதிப்பேன்

4. காரிருள் சூழ்ந்த வேளைகளில்
கர்த்தர் என் ஒளியானார்
கரம்பிடித்தே ஆதரித்தார்
கருத்தாய் அவரைப் போற்றிடுவேன் — துதிப்பேன்

5. கை வேலை யல்லா வீட்டினிலே
கொண்டெனைச் சேர்த்திடுவார்
ஆளுவேன் நேசர் இயேசுவோடே
வாழ்ந்திடுவேன் அவரோ டென்றுமாய் — துதிப்பேன்

# 4

*சரணங்கள்*

1. தேவனையே துதித்திடுவோம்
தினமும் அவர் துதி சாற்றிடுவோம்
திரு ரத்தம் சிந்தி மீட்டெடுத்தார்
தூயவர் பாதம் பணிந்திடுவோம்

ஆர்ப்பரித்தே நாம் ஆனந்திப்போம்
அல்லேலூயா பாடுவோம்
அல்லும் பகலும் அன்பர் இயேசுவின்
அன்பதை எண்ணி வாழ்ந்திடுவோம்.

2. சென்ற காலம் முழுவதிலும்
சேதம் அணுகாமல் பாதுகாத்தார்
கூப்பிடும் வேளையில் செவி கொடுத்தார்
தேவைகள் யாவும் ஈந்தளித்தார் — ஆர்ப்பரித்தே

3. [illegible]
[illegible]
[illegible]
[illegible] — ஆர்ப்பரித்தே

4. [illegible]
[illegible]
தூய வழிதனில் நடத்திடவே
உம் அருள் ஈந்தே ஆதரிப்பீர் — ஆர்ப்பரித்தே

5. வாக்கு மாறாத வல்லவரே
வருங்காலம் யாவும் நீ நடத்தும்
உம் வருகை எதிர் நோக்கி என்றும்
ஆயத்த மாகியே காத்துக்கொள்வீர் — ஆர்ப்பரித்தே

# 5

பல்லவி

ஆத்துமமே என் உள்ளமே
ஆண்டவரை ஸ்தோத்தரிப்பாய்
அவர் செய்த உபகாரங்களை
என்றென்றும் நீ மறவாதே

சரணங்கள்

1. பாவங்களை மன்னித்தாரே
நோய்களையும் குணமாக்கினாரே
பிராணனையும் பாதுகாத்து
கிருபையினால் முடி சூட்டினார் — ஆத்துமமே

2. நன்மையினால் உன் வாயை
நிறைத்தே ஆசீர் பொழிந்திடுவார்
கழுகினைப்போல் வயதினையும்
மாற்றிடுவார் வாலிபமாய் — ஆத்துமமே

## 3

பெலவீனமாம் நோய்கள் தீரும் – இனி
குறுகிய நம் பார்வை மாறும்
இறையரசின் கொடைகளையும் புனித அருள்வரங்களையும்
இல்லங்கள் கண்டு மகிழும் — ஆவியே

# 7

### பல்லவி

இயேசுவின் நாமத்தில் கூடி வந்தோம்
திரியேக தேவனை ஆராதிப்போம்
எண்ணில்லா நன்மைகள் நம் வாழ்வில் தந்ததால்
என்றென்றும் ஸ்தோத்தரிப்போம் – 2

### சரணங்கள்

1. தேவா உம் கிருபை எத்தனை பெரிது
இயேசுவே உம் அன்பு உயர்ந்தது
அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர்
அல்லேலூயா உமக்கே — இயேசுவின்

2. உம் அன்பின் அகலம் நீள உயரம்
ஆழமும் ஆராய முடியாதே
கருணையின் தேவனே வல்லமை நாதனே
சாற்றிடுவோம் துதியே — இயேசுவின்

3. சோதனை விபாதி சூழ்ந்திடும் நேரம்
தாங்கினீர் உந்தனின் கிருபையால்
நம் பெலவீனத்தில் மாபெலமும் அவர்
அல்லேலூயா துதியே — இயேசுவின்

4. கானக பாதை நாம் செல்லும் வேளை
தேற்றிடுவார் திவ்ய வாக்குகளால்
தேவாதி தேவனை சேனைபதியனை
போற்றிப் புகழ்ந்திடுவோம் — இயேசுவின்

5. ஜெய வேந்தர் இயேசு முன் செல்வதாலே
ஜெயக்கொடி ஏற்றி நாம் பின் செல்லுவோம்
தேவாசீர் வாதங்கள் என்றும் நிலைத்திட
தேவனை அண்டிக் கொள்வோம் — இயேசுவின்

# 8

*பல்லவி*

ஆர்ப்பரிப்போம் தினம் அக மகிழ்வோம்
இராஜாதி இராஜன் நம்மை ஆட்சி செய்வார்

*சரணம்*

1. அல்லேலூயா கீதம் தொனித்திடுமே
எக்காள சத்தம் முழங்கிடுமே
மணவாளன் இயேசு வந்திடுவார்
மணவாட்டியாய் அவர் பின் செல்லுவோம் —ஆர்ப்பரிப்போம்

2 நடு வானில் இயேசு ஆட்சி செய்வார்
நீதியின் செங்கோலை அவர் பிடிப்பார்
வெண்ணங்கி உடையை தரித்தோராய்
தூய கீதங்கள் நாம் பாடிடுவோம் —ஆர்ப்பரிப்போம்

3. பஞ்சமில்லை அங்கு பசியுமில்லை
துன்பமில்லை அங்கு துயரமில்லை
நீடித்த ஆயுளை நமக்களிப்பார்
நீதிமான்களாய் நாம் நிலைத்திருப்போம் —ஆர்ப்பரிப்போம்

# 9

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

*பல்லவி*

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணிபோல காத்தருளும்
கிருபையால் நிதம் வழி நடத்தும் —அல்லேலூயா

3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம் —அல்லேலூயா

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
வேத வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம் — அல்லேலூயா

5. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம் —அல்லேலூயா

# 10

*பல்லவி*

துதித்திடும் என்றும் இயேசுவின் நாமத்தை
சகல ஜனங்களும் கூடி வந்தே
தம்புரு வீணைகள் மீட்டி எக்காலத்தும்
கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்தரிப்போம்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அவர் நல்லவரல்லோ
அல்லேலூயா ஜெயம் என்றுமுள்ளது.

### சரணம்

1. பாவத்தை விட்டு நாம் ஓடிடுவோம்
பாவ வழிகளை விட்டிடுவோம்
பாவத்திற்காய் ஜீவன் தந்ததினால்
பாவமில்லாமலே ஜீவிப்போம் நாம் — துதித்திடும்

2. நேசரின் சிநேகத்தை துதித்திடவே
ஆயிரம் நாவுகள் படைத்திடுவோம்
துதிகளின் பாத்திரம் நம்மில் உண்டு
நாள்தோறும் எடுத்து நாம் ஸ்தோத்தரிப்போம் — துதித்திடும்

3. எண்ணத்தால் கீதங்கள் மீட்டிடவே
பாதங்கள் இவ்விடம் கூடிடுமே
ஆயிரமாயிரம் சுத்தர்களாய்
புகழும் கனமும் சேர்ந்திடுமே — துதித்திடும்

## 11

### பல்லவி

என் இயேசுவின் சந்நிதியில் - என்றும்
கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமதே
துதி கீதங்கள் பாடிடுவேன் — என்

### சரணங்கள்

1. கண்ணீர் அவர் துடைத்திடுவார்
கருணைக் கரம் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்கள் அகன்றிடுமே — என்

2. பரமன் குரல் கேட்கும்போது
பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் எல்லாம் அவர் கிருபையால்
அதி சீக்கிரம் கிடைத்திடுமே — என்

# 12

### பல்லவி

இயேசுவின் திருச்சபையே
பரிசுத்த ஆலயமே
பரிசுத்தர் வம்சமே
பரிசுத்தாசாரியர் ஜனமே

### சரணங்கள்

1. இயேசுவின் இரத்தத்தால் மறு ஜனனமும்
புது உடன்படிக்கையின் சேவகரும்
இதயத்தில் பரிசுத்தம் நிறைந்திருப்போர் நாம்
மனமொரு வீடாமே
அவர் சொந்த ஜனமாமே — இயேசுவின்

2. இரட்சிப்பின் வாசலைக் கடந்தவரும்
இரட்சகர் இயேசுவைக் கண்டவரும்
கல்வாரி சிகரத்தின் பாதையில் என்றென்றும்
கண்டிடும் புது ஜீவன் — இயேசுவின்

3. சோதனை மனத்துன்பம் நெருக்கும்போது
காத்திடும் கர்த்தர் கூட உண்டு
அக்னியின் மத்தியில் துணையாய் வந்திடும்
ஆத்தும சிநேகிதர் தாம்
அவர் தம் ஜீவனை நல்கினார் — இயேசுவின்

# 13

### பல்லவி

அன்பெனும் அருட்பெரும் செல்வம் - அது
என் அகந்தனிலே இல்லையெனில்
என்னுடை வாழ்வில் பயன் என்ன
என்னுடை வாழ்வில் பயன் என்ன

சரணம்

1. மண்ணோர் மொழிகளை அறிந்திடினும்
விண்ணோர் மொழிகளை உரைத்திடினும் } 2
என்பால் நிலவும் பண்புகளில்
அன்போர் அணுவும் இல்லையெனில்
வெண்கல ஒலியும் தாளமிடும் - (2)
கிண்கிணி நாதமும் ஆனவனே — அன்பெனும்

2. என்னுடல் எரிதழல் கொண்டாலும்
என் பொருள் முழுவதும் இழந்தாலும் } 2
என் பலம் விந்தைகள் செய்தாலும்
எண்ணரும் புகழ் எனையடைந்தாலும்
அன்பெனும் இறையருள் இல்லையெனில் - (2)
என்னிடம் உள்ளது எதுவுமில்லை — அன்பெனும்

3. மலைதனைப் பெயர்க்கும் பலமிருந்தும்
அலை கடல் தூர்க்கும் திறம் இருந்தும் } 2
கலைகளை அறியும் அறிவிருந்தும்
உலகியல் தெளியும் உளமிருந்தும்
நலம் பல நல்கும் அன்பில்லையேல் - (2)
பலன் தரா வாழ்வென் வாழ்வாமே — அன்பெனும்

# 14

பல்லவி

அனுப்பும் தேவா உம் ஆவியினை
அடியார் மீதே இவ் வேளையிலே

அனுபல்லவி

பரிசுத்த ஆவி பலமாய் இறங்கி
பின் மாரி பெய்திடவே — அனுப்பும்

### சரணங்கள்

1. சுட்டெரிக்கும் தேவ அக்கினியே
சுத்திகரிக்கும் எம்மை
குற்றம் குறைகள் கறைகளை
முற்றும் நீக்கி சுத்தம் செய்ய
— அனுப்பும்

2. பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள்மேல்
பலத்த காற்றாய் வந்தீர்
பலவீனர் எம் உள்ளத்திலும்
தேவ பலனை பெற்றிடவே
— அனுப்பும்

3. மீட்கப்படும் நல் நாளுக்கென்றே
பெற்ற உம் ஆவிதனை
துக்கப் படுத்தா பாதுகாத்து
தூய வழியில் நடந்திட
— அனுப்பும்

4. இளைத்துப் போன உள்ளம் பெலனடைந்து
இடைவிடா சேவை செய்ய
இரட்சகர் இயேசுவின் சாட்சியாக
பாரில் எங்கும் ஜீவித்திட
— அனுப்பும்

# 15

### பல்லவி

ஒரே வழி எங்கள் இயேசுவின் வழி
இன்ப மோட்ச நாட்டை நாம் சேரும் வழி
பாவமில்லா நாடு பரலோக நாடு
அந் நாடு சேர இயேசுவே வழி

### சரணம்

1. பூமியில் பிறந்ததின் நோக்கத்தை நினைத்து
கலங்கி சோர்வாயோ
நோக்கிப் பார் இயேசுவை
நோக்கமும் அர்த்தமும் தந்திடுவார்
— ஒரேவழி

2. பாவத்தின் பிடியினில் ஆத்துமா தியங்கி
பாரம் சுமப்பாயோ
நோக்கிப் பார் இயேசுவை
பாவமும் பாரமும் நீக்கிடுவார் — ஒரேவழி

3. திரும்பி நீ பார்த்துமே பாவத்தில் விழுந்து
நிம்மதி இழந்தாயோ
நோக்கிப்பார் இயேசுவை
இரட்சிப்பின் சந்தோஷம் தந்திடுவார் — ஒரேவழி

4. பாவத்தின் சம்பளம் மரணத்தை அழிக்க
இயேசு தோன்றினார்
மரித்தாரே உயிர்த்தாரே
பாதையாய் தீபமாய் மாறினாரே — ஒரேவழி

# 16

*பல்லவி*

என் தேவன் என் பெலனே
அவர் கூறும் நல்வசனம்
என் பாதையில் வெளிச்சம்
அவர் நாமம் என் நினைவே

*சரணம்*

1. தீங்கு நாளில் என்னை அவர்
தம் கூடார மறைவில் காத்திடுவார்
தகுந்த வேளை தம் கரத்தால்
கன்மலை மேலாய் உயர்த்திடுவார் — என்

2. கர்த்தரிடம் ஒன்றைக் கேட்டேன்
அதையே அவரிடம் நாடிடுவேன்
அவரின் முகமதை நான் காண
அவரில் என்றும் நிலைத்திருப்பேன் — என்

3. கர்த்தருக்காய் காத்திருவாய்
அவரால் இதயம் ஸ்திரப்படுமே
திடமனதோடு காத்திருந்தால்
அடைக்கலம் புகலாய் என்றென்றுமே — என்

# 17

பல்லவி

முன்னேறிச் செல்வீர் - பின் நோக்காமலே
வென்றேறிச் செல்வீர் - இயேசு நாமத்தில்
செல்லும் எவ்விடம் - ஆட்கொண்டிடுவீர்
வெற்றி வேந்தன் இயேசு ராஜன்
வெற்றி சிறந்தார்.

சரணங்கள்

1. நற் செய்தியினை சுமக்கும் பாதங்கள்
மலைகளில் எத்தனை அழகானதே
கர்த்தர் உங்களைக் கடைசிவரைக்கும்
காத்துக் கொள்வார் அணைத்துக் கொள்வார்
ஆசீர்வதிப்பார் — முன்னேறி

2. பயப்படாதே நீ திகைத்து நில்லாதே
உன்னுடன் எப்போதும் நானிருக்கிறேன்
பெலப்படுத்தி சகாயம் பண்ணி
என் நீதியின் வலது கரத்தால்
உன்னைத் தாங்குவேன் — முன்னேறி

3. உள்ளங் கைகளில் வரைந்திருக்கிறேன்
என்றுமே எங்குமே நீ என்னுடையவன்
கண்ணின் மணிபோல் காத்துக்கொள்ளுவேன்
வாக்கு மாறா இயேசு தேவா
வழி நடத்துவேன் — முன்னேறி

# 18

1. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்களித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத்தரும்

*பல்லவி*

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்யங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத்தரும்.

2. கவலைச் சுமை நீ சுமக்கும்போதும்
சிலுவை உனக்குப் பளுவாகும்போதும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத்தரும் — எண்ணிப்

3. நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும்போது
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு
பணங்கொள்ளா பேராசீர் வாதத்தைப்பார்
பரலோக பொக்கிஷமும் வீடும் பார் — எண்ணிப்

4. அநேக துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைரியப்படாதே கர்த்தர் உன் பககம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில் — எண்ணிப்

# 19

*பல்லவி*

இறை வழி செல்வோர் பேறு பெற்றோர் (2)
பேறு பெற்றோர் (4)

*சரணம்*

1. தீயோரின் அறிவுரை கேளாதவன் } 2
பாவியின் வழியில் செல்லாதவன்
பழிகாரர் கூட்டத்தில் அமராதவன்
பேறு பெற்றோன் பேறு பெற்றோன் — இறைவழி

2. மாசற்ற வாழ்க்கை நடத்துபவன்
நீதி நியாயத்தில் நிலை நிற்பவன் } 2
இதயத்தில் இனியவை தியானிப்பவன்
பேறு பெற்றோன் பேறு பெற்றோன் — இறைவழி

3. தீயோரை இழிவாகக் கருதாதவன்
பிறரைப் பழித்துப் பேசாதவன் } 2
நாவால் பழிச்சொல் கூறாதவன்
பேறு பெற்றோன் பேறு பெற்றோன் — இறைவழி

# 20

*பல்லவி*

இயேசுன்னைக் கண்டதும்
உள்ளம் மகிழ்வாரா
உன்னைக் கண்டதுமே புன்னகை வருமோ
உள்ளத்தை ஆராய்ந்து பார் (2)

*சரணம்*

1. நான் போகும் பாதை எல்லாமே தூய்மை
என்றுன்னால் சொல்ல முடியுமா
முடியாவிட்டால் இன்றுன் கடைகளை - 2
இயேசுவிடம் நீ கொண்டுவா — இயேசு

2. கள்ளத்தனமாய் நீ செய்யும் செயல்கள்
கர்த்தரின் பார்வையில் மறையுமா
காட்டிக் கொடுக்கும் உந்தன் பாவங்களே - 2
மனந்திரும்பி ஓடிவா — இயேசு

3. நீ வாழும் வாழ்க்கை சிற்றின்ப வாழ்க்கை
என்றென்றும் இன்பம் தந்திடுமோ
நிலையான இன்பம் பெற்றிட ஓடிவா - 2
இயேசுன்னை இன்றே அழைக்கிறார் — இயேசு

# 21

*பல்லவி*

தேசமே பயப்படாதே
மகிழ்ந்து களிகூறு
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்

*சரணம்*

1. பலத்தினாலும் அல்லவே
பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே — **தேசமே**

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார் — **தேசமே**

3. கசந்த மாரா மதுரமாகும்
கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார் — **தேசமே**

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய் — **தேசமே**

5. மாமிசமான யாவர் மீதும்
உன்னத ஆவியைப் பொழியுவார்
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்
எழும்பி சேவையும் செய்திடுவாய் — **தேசமே**

# 22

பல்லவி

இஸ்ரவேலே இஸ்ரவேலே
ஏன் அழுதாய் இஸ்ரவேலே
கலங்காதே நீ திகையாதே
நான் உன்னோடே இருக்கிறேனே

சரணம்

1. ஓங்கும் மலையும் மறைந்த காரும்
உனக்கு உண்டு பதறாதே
காக்கும் கரத்தால் உன்னைக் காப்பேன்
பாரில் என்றுமே நான் உன் தேவன் — இஸ்ரவேலே

2. பாவம் தீர்த்து விடுத்து மீட்ட
பலியா ஆட்டுக் குட்டி நானே
பாக்களால் உன் வாயை நிறைத்தேன்
பாடுவாயே அல்லேலூயா — இஸ்ரவேலே

3. மாரா தண்ணீர் மதுரமாகும்
மலையாதே நீ மகிழ்ந்திடுவாய்
மரணம் வென்ற மகிபன் நான் உன்
மதிலாய் இருந்து காத்திடுவேன் — இஸ்ரவேலே

4. பொங்கும் கடல் உன் பாதையாகும்
பதறாதே நீ பாடிடுவாய்
பரமன் நாமம் பகைத்த துருகம்
ஓடச் சுகமாய் தங்கிடுவாய் — இஸ்ரவேலே

# 23

பல்லவி

அனைத்தையும் வென்றவர் கிறிஸ்து (2)
அனைத்தையும் ஆள்பவர் கிறிஸ்து (2)
அனைத்தையும் ஆள்பவராம்
கிறிஸ்து நாதரே

### சரணம்

1. சிலுவையில் வீரம் சிலுவையில் தியாகம்
சிலுவையிலே நம் விடுதலையாம் } 2
கிறிஸ்து நாதரே
— அனைத்தையும்

2. சிலுவையில் அன்பு சிலுவையில் தெம்பு
சிலுவையிலே அரும் வெற்றியாம் } 2
கிறிஸ்து நாதரே
— அனைத்தையும்

3. சிலுவையில் மீட்பு சிலுவையில் வாழ்வு
சிலுவையிலே உத்தானமாம் } 2
கிறிஸ்து நாதரே
— அனைத்தையும்

# 24

### பல்லவி

கிருபை கிருபை கிருபை பொழிவீர்
தேவா இந் நேரமே எம் மீதிலே

### சரணங்கள்

1. இத்தனை ஆண்டுகள் சுமந்தீரே
எச் சேதமும் எமை அணுகாமல்
இந்தப் புது ஆண்டினையும்
கண்டு களிக்கக் கிருபை செய்தீர் — கிருபை

2. தேவ சித்தம் யாம் செய்திடவே
தேவா உம் கிருபை ஈந்திடுவீர்
எம்மீது உம் கண்ணை வைத்து
ஆலோசனை தந்து நடத்திடுவீர் — கிருபை

3. வளமாக என்றும் வாழ்ந்திடவே
வாடா உம் கிருபை ஊற்றிடுவீர்
நாடோறும் உம் பின் சென்றிட
நாதா உம் பாதை காட்டிடுவீர் — கிருபை

4. நேயமான பாதையில் சென்றிடவே
நேய கிறிஸ்து நீர் எம்முன் செல்லுவீர்
நேய கீதங்கள் பாட என்றும்
சேவை செய்யக் கிருபை ஈந்தளிப்பீர் — கிருபை

# 25

பல்லவி

மீட்பர் இயேசுவே — கோரச்
சிலுவை மீதினிலே
குருசில் மரித்தாரே
சாபங்கள் அடைந்தே — மீட்பர்

சரணங்கள்

1. கால்கள் கைகளிலே
ஆணிகள் அறைந்தனரே
முட் கிரீடம் சூடியே மூன்றாணி மீதிலே
கர்த்தர் இயேசு தொங்கினார் — மீட்பர்

2. கள்ளர் மத்தியிலே
கள்ளன் போல் தொங்கினாரே
இத்தனை பாடுகள் உங்களின் வாழ்வுக்காய்
சொந்தமாய் ஏற்றுக்கொண்டார் — மீட்பர்

3. இரத்த வெள்ளத்திலே
அன்பின் வெள்ளம் பாய்ந்திடவே
அலைந்து திரிந்திடும் ஆடுகட்காகவே
நல் மேய்ப்பர் பலியானார் — மீட்பர்

4. பாவ சாபங்களும்
தீரா ரோகங்கள் அனைத்தும்
சுமந்தார் சிலுவையில் தம் சரீரத்திலே
இன்றே சுகமடைவாய் — மீட்பர்

5. பேரின்ப வாழ்வதனை
பெற்று நீயும் ஆனந்திக்க
நேசர் இயேசுவை இன்றே நம்பி வந்திடுவாயே
பாசமாய் ஏற்றுக்கொள்வார் — மீட்பர்

# 26

*பல்லவி*

என்னை மீட்ட மீட்பரே
என்னைக் காத்த நேசரே
எந்தன் வாழ்க்கை முழுவதுமே
ஏற்றுக்கொள்ளுமே இன்று

*சரணம்*

1. இப் பாவ லோகத்திலே
இறங்கினீர் வானம் விட்டு
ஈனச் சிலுவையிலே
இறந்து நீர் உயிர்த்தீரே — என்னை

2. நீர் பட்ட பாடெனக்காய்
நீசன் எனை மீட்கவே
நீர் என்னை இரட்சித்ததால்
நித்தம் நான் துதிப்பேனே — என்னை

# 27

1. கரம்பிடித்தென்னை வழி நடத்தும்
இயேசுவே என்னை நான் ஒப்புவிக்கிறேன்
பாதை தெரியாத பாவி நானையா
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும்,

இயேசுவே இரங்குமே
வழி நடத்துமே — (2)

2. பாவ இருள் நீக்கி வழி நடத்தும்
பாவக் கறை போக்கி சுத்திகரியும்
செம்பாவம் அகற்றி வெண்மையாக்குமே
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும்

3. தீபம் காட்டி என்னை வழி நடத்தும்
ஆவியைக் கொடுத்து தேற்றியருளும்
வெளிச்சத்தின் பாதையில் அழைத்துச் சென்று
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும்

4. நேசரே என்னை நீர் வழி நடத்தும்
காருண்யத்தைக் காட்டி அழைத்துச் செல்லும்
உறைந்த மழையைப்போல் வெண்மையாக்குமே
என்னை உம் சித்தப்படி நீர் வழி நடத்தும்

## 28

### பல்லவி

மகிழ்ந்திடுவேன் நான் கர்த்தருக்குள்
களி கூறுவேன் என் தேவனுக்குள்
இரட்சிப்பின் தேவனுக்குள்
ஆமென் அல்லேலூயா — 4

### சரணங்கள்

1. அத்தி மரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி பழம் இல்லாமல போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

2. ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும்
வயல்களில் தானியம் விளையாமற் போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

3. கிடையில் ஆடுகள் முதலற்றுப் போனாலும்
தொழுவத்தில் மாடுகள் இல்லாமற் போனாலும்
— மகிழ்ந்திடுவேன்

# 29

### பல்லவி

பாடுவேன் அல்லேலூயா
இராஜாதி இராஜன் நம்பிரானே
எல்லாம் எனக்கவரே
பின் செல்வேன் என்றென்றும்

### சரணம்

1. என் இதயத்தின் கீதம்
நெருக்கம் சங்கடம்
என் வாழ்வின் பிரயாசங்களில்
வழி நடத்தினார் — பாடுவேன்

2. தம் நித்ய சிநேகம் கொண்டு
என்னை அழைக்கிறார்
தம் அருள் மழை பெய்து
என்னைக் காத்தருள்வார் — பாடுவேன்

3. மேலோக நாட்டில் என்னை
அவர் சேர்த்திடுவார்
விண் தூதரோடு நானும்
என்றும் பிரகாசிப்பேன் — பாடுவேன்

# 30

### பல்லவி

எந்தன் இயேசு எனக்கு நல்லவர்
அவர் என்றென்றும் போதுமானவர் } 2
ஆபத்தில் வியாதியில் என் பிரயாசங்களில்
என்றுமே அவர் போதுமானவர் } 2

சரணங்கள்

1. கல்வாரி மலைமேல் ஏறியே
முள்முடி சிரசில் சூடியே - எந்தன்
வேதனை யாவையும் நீக்கி என்னில் புது
ஜீவனை ஊற்றினதால்
— எந்தன்

2. அவர் ஆதியும் அந்தமுமே
தெய்வ சிநேகத்தின் பிறப்பிடமே
பதினாயிரங்களில் மிகச் சிறந்தவரே
துதிக்கப்படத் தக்கவரே
— எந்தன்

3. புவியாத்திரை மிகக் கடினம்
தேவ கிருபைகள் எந்நேரமும்
பகல் மேகஸ்தம்பம் இராவில் அக்னிஸ்தம்பம்
அனுதினம் என்னை வழி நடத்தும்
— எந்தன்

4 எந்தன் ஏக்கம் எல்லாம் நீங்கிப்போம்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவார்
இயேசு இராஜாவாய் வானத்தில் வெளிப்படும் நாள்
நான் அவருடன் பறந்திடுவேன்
— எந்தன்

# 31

## நீங்களே என் சாட்சிகள் (3)

1. ஆதியிலே நான் வார்த்தையாய் இருந்தேன்
நீங்களே என் சாட்சிகள்
ஆவியால் கன்னி மரியிடம் பிறந்தேன் ,, ,,
அன்புத் தந்தை என்னை அனுப்பினார் ,, ,,
ஆண்டவராக இதோ வாழ்கிறேன் ,, ,,

2. பாவியை மீட்க உலகில் வந்தேன் ,, ,,
பாவத்தைப் போக்க பாடுகள் பட்டேன் ,, ,,
பாவியைப் போல சிலுவையில் மரித்தேன் ,, ,,
மகிமையில் உயிர்த்து இதோ வாழ்கிறேன் ,, ,,

3. தூய ஆவியை உங்களுக்களித்தேன் நீங்களே என் சாட்சிகள்
சாற்றுரைக்க உங்களை அழைத்தேன் " "
தூய அன்பால் உங்களை இணைத்தேன் " "
உங்களோடு நான் இதோ வாழ்கிறேன் " "

# 32

1. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி
தேவ பர்வதம் தம் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார்
பூலோக மக்களும் கண்டிடுவார்

*பல்லவி*

இயேசுக் கிறிஸ்து வருகின்றார்
இந்தக் கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும்
கண்டு புலம்பிடுமே.

2. ஏழாம் தலைமுறை ஏனோக்குரைத்த
எல்லாம் நிறைவேறும் காலம் நெருங்க
இயேசுக் கிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார் — இயேசு

3. தம்மை விரோதித்த அவபக்தரை
செம்மை வழிகளில் செல்லாதவரை
ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயந் தீர்த்திடுவார் — இயேசு

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய்
எல்லா அநீதிக்கும் கூலி பெறுவாய்
கல்வாரி சிலுவை அண்டிடுவாய்
கர்த்தரை நம்பியே தப்பிடுவாய் — இயேசு

5. யுத்தம் துடங்குமுன் மத்தியவானம்
சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே
ஆண்டவர் இயேசுவை அழைக்கின்றோம் — இயேசு

## 33

பல்லவி

எத்தனை தாலந்துகள் உன்னில் உள்ளதோ
அத்தனையும் இரட்டிப்பாக்க ஆயத்தம்தானோ } 2

சரணங்கள்

1. ஐந்து தாலந்தை பத்தாக்கினான்
இரண்டு தாலந்தை நான்காக்கினான்
ஒன்றே தாலந்தை இரண்டாக்காமல்
மண்ணில் புதைத்தவன் புறம்பானானே — எத்தனை

2. உண்மையுமான ஊழியரே
உத்தமமான ஊழியரே
அநேகத்தின் மேல் அதிகாரியாவீர்
ஆனந்தத்தால் பரிபூரணராவீர் — எத்தனை

## 34

உயர உயர போவதும்
உன்னத பெலனைப் பெறுவதும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
கண்டடையும் பாக்கியமே - 2

தெய்வீக புதுப் பெலன்
பெலவீன மனிதரை
மேற்கொள்ளுதே
தேவனுக்கே மகிமை

# 35

1. ஒரு குப்பித் தைலத்தின் நறுமணத்தை
ஒரு குட்டி செத்த ஈ நாறச் செய்யுமே
ஒரு குடம் பாலில் ஓர் துளி விஷமே
தவறிப் பட்டாலும் எல்லாம் கெடுமே

ஒரே ஒரு ஜீவியம் உலகினிலே
ஒரே தேவன் இயேசுவோடுழைத்திடவே
பரிசுத்த வாழ்வில் ஓர் சிறு பாவமே
பரமனை உன்னின்று பிரித்திடுமே

2. பரிசுத்தமில்லாமல் இறைவனை நீ
தரிசிக்க முடியாதென் றிருப்பதனால்
அனுதினம் உள்ளத்தை ஆராய்ந்திரு
அசுத்தங்கள் நீக்கி அதில் நிலைத்திரு.

# 36

மண்ணோரை மீட்க வந்த ராஜாவே
விண்ணின்று மீண்டும் வாருமே —
மண்ணோராம் எம்மை விண்ணோடு சேர்க்க
விண் தூதரோடு வாருமே
பின்பற்றுவோர்க்கு பிதாவின் வீட்டில்
பேரின்பத்தோடு வாழ்வதற்கு
வாசஸ்தலங்கள் உண்டென்று சொல்லி } 2
சென்ற எம் தேவா வாருமே.

அறியாத நேரம் வருவேனென்றீரே
அடியார்கள் இன்றே ஊக்கத்தோடே
விசுவாசம், அன்பு, நம்பிக்கையோடே
விழித்திருக்க அன்பாய் அருள்தாருமே
நித்திரைசெய்யும் தெய்வ தாசரும்
இத்தரை மீது வாழும் நாங்களும்
கீர்த்தனம் பாடி எதிர்கொண்டு செல்ல } 2
கெம்பீரத்தோடு வாருமே

# 37

வாக்குத்தத்தங்கள் யாவும் எனதே
தேவ அன்பின் ஆசீர்வாதங்களே
ஒவ்வோர் வார்த்தை ஒவ்வோர் வாக்கியமும்
வாக்குத்தத்தங்கள் யாவும் எனதே.

Every promise in the Book is mine
Every chapter, every verse, every line
All are blessings of His love divine
Every promise in the Book is mine.

# 38

மோட்சமிறங்கி மகிமையால் நிரப்பினார்
சிலுவையண்டை யேசு சுகமாக்கினார்
என் பாவத்தைக் கழுவினார் - என்
சாபத்தைத் துலைத்திட்டார்
மோட்சமிறங்கி மகிமையால் நிரப்பினார்

Heaven came down and glory filled my soul
when at the cross my saviour made me whole
My Sins were washed away
And my night was turned to day
Heaven came down and glory filled my soul

# 39

நான் பயப்படும் நாளில் - நான் பயப்படும் நாளில்
உம்மையே நம்புவேன் - உம்மையே நான் நம்புவேன்
நான் மகிழ்ந்திடும் வேளை - நான் மகிழ்ந்திடும் வேளை
உம்மையே பாடுவேன் - உம்மையே நான் பாடுவேன்

## 40

உம்மைப் போலாக்கும் இயேசுவே
உம்மைப் போலாக்கும்
உள்ளத்தை அன்பால் நிரப்பி என்னை
உம்மைப் போலாக்கும்

Make me more like Thee - Jesus
Make me more like Thee
Give me a heart that's filled with love
And make me more like Thee

## 41

This is the day (2)
That the Lord has made (2)
We will Rejoice (2) And be glad in it (2)

மகிழ்ந்திடுவோம் (2) இந்த நன்னாளிலே (2)
கர்த்தர் உண்டுபண்ணின (2)
இந்நன்னாளிலே (2)

## 42

The joy of the Lord is my Strength (4)
என் பெலன் கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பது (3)
என் பெலன் கர்த்தருக்குள் மகிழ்ச்சி

## 43

எந்தன் பொன்னேசு பொற்பாதம் பாடிடுவேன்
அவர் சுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே !
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
துங்க இஸ்ரவேலின் தேவனே - எந்தன்

## 44

மகிழ்வோம் நம் ஆண்டவரில் - என்றும்
அவரில் நாம் அகமகிழ்வோம்
மகிழ்வோம் மகிழ்வோம் - என்றும்
இயேசுவில் அகமகிழ்வோம்

Rejoice in the Lord always } (2)
And again I say Rejoice }
Rejoice (2) And Again I say Rejoice (2)

## 45

Let the beauty of Jesus be seen in me
All His wondrous Compasion and Purity
Oh thou sprit divine, All my nature refine
Till the beauty of Jesus be seen in me

இயேசுவின் அழகு என்னில் காணுமட்டும்
அவர் அன்பும் இரக்கமும் தூய்மையும்
ஆவி ஆனவரே என்னை சுத்தம்செய்யும்
இயேசுவின் அழகு என்னில் காணுமட்டும்



We are committed to the time - honored truths of the Christian faith - such as the Trinity, deity of Christ, virgin birth, blood atonement, bodily resurrection and ascension, second coming, final judgement, justification by faith alone, sanctification through the cleansing power of the Holy Spirit, and glorification of Christ's soon return.

Original Press, Kavipam